**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனச் செயல்முறைகள், சென்னை 6.**

ந.க.எண். 2411/ஈ2/2021 நாள் 30.05.2022

**பொருள்** மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை 6 – எண்ணும் எழுத்தும் திட்டம் - அரசு, அரசுதவி பெறும் பள்ளிகளில் 1,2,3 வகுப்புகளைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்கள் - வட்டார அளவிலானப் பயிற்சிகள் நடத்துதல் – சார்பு.

**பார்வை** 1. பள்ளிக் கல்வித் (ERT) துறை, அரசாணை எண். 147, நாள் 22.10.2021

2. 2022-23ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர் திறன் மேம்பாடு நாட்காட்டி

பார்வை 1இல் கண்ட அரசாணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1,2,3 ஆகிய வகுப்புகளுக்கு 2022-23ஆம் ஆண்டிலிருந்து எண்ணும் எழுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. பார்வை 2இல் கண்ட 2022-23ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர் திறன் மேம்பாடு நாட்காட்டியின்படி எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மாநில அளவிலான பயிற்சி நடைபெற்று முடிந்துள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளைக் கீழ்க்காணுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் இணைந்து திட்டமிட அறிவுறுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| பயிற்சி பெறுவோர் | **1,2,3 வகுப்புகளைக் கற்பிக்கும் அனைத்து அரசு மற்றும் அரசுதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள்** |
| பயிற்சி இடம் | உயர் தொழில்நுட்ப ஆய்வகம் அமையப் பெற்ற உயர்நிலை அல்லது மேல்நிலைப்பள்ளி |
| பயிற்சி நாள் | 06.06.2022 முதல் 10.06.2022வரை (5 நாள்கள்)<br>(பயிற்சியின் கால அட்டவணை இணைப்பில் உள்ளது) |

- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் இணைந்து மாவட்டங்களில் உள்ள

உயர்தொழில்நுட்ப ஆய்வகம் அமைந்துள்ள பள்ளியைப் பயிற்சி மையமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- பயிற்சி மையம், காற்றோட்டமுள்ளதாகவும் பங்கேற்கும் ஆசிரியர்களின் போக்குவரத்திற்கு ஏற்றவகையிலும் பயிற்சி அளிப்பதற்கான தொழில்நுட்ப (LCD Projector) கருவிகளுடனும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- பயிற்சி மையம், இருக்கை வசதிகளுடன் கூடிய பயிற்சி அறை, மின்வசதி, தண்ணீர் வசதி, கழிப்பறை வசதிகளுடன் அமையப் பெற்றிருக்க வேண்டும்.
- அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மற்றும் கல்வியாளர்கள் (DIET Principal & Faculty) அனைத்து நாள்களும் பயிற்சி நடைபெறும் இடத்தில் இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களும் (BEO) பயிற்சியில் கலந்து கொள்ளவேண்டும்.
- பயிற்சிக்கான முன் ஏற்பாடுகளை முறையாகச் செய்து, கால அட்டவணைப்படி பயிற்சி நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- பயிற்சி குறித்த செய்தி அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாகச் சென்றடைவதை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
- சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாகத் தகவல் சென்றடைவதை உறுதி செய்தல் வேண்டும்.
- பயிற்சிக்குத் தேவையான துணைக்கருவிகள் பட்டியல், அவற்றைத் தயாரிப்பதற்கான பொருள்கள் வாங்குதல், துணைக்கருவிகள் தயாரிப்பிற்கான நேரம், திட்டமிடல் போன்றவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு மையத்திற்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர் (DIET Faculty) மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளரைப் பொறுப்பாளராக நியமிக்க வேண்டும்.

15.01

**இயக்குநர்,**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

**இணைப்பு** - பயிற்சி – கால அட்டவணை

**பெறுநர்**

அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல்**

இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை -6.

**நகல்**

பள்ளிக்கல்வி முதன்மைச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை-9
ஆணையர், பள்ளிக்கல்வி, பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை 6.
மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை 6. -
– அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

**இணைப்பு**

**எண்ணும் எழுத்தும்**
**வட்டார அளவிலான பயிற்சி – கால அட்டவணை**

| நாள் | நேரம் | பயிற்சி உள்ளடக்கம் |
|---|---|---|
| நாள் 1 | 9.00மு.ப - 9.30 மு.ப | வருகைப் பதிவு |
| | 9.30மு.ப - 10.00 மு.ப | தொடக்க நிகழ்வு |
| | 10.00மு.ப - 11.15 மு.ப | எண்ணும் எழுத்தும் திட்டம் – அறிமுகம் |
| | 11.15 மு.ப - 11.30 மு.ப | தேநீர் இடைவேளை |
| | 11.30மு.ப - 01.00 பி.ப | எண்ணும் எழுத்தும் - தமிழ் சிறப்பு உத்திகள் (பாடல், கலந்துரையாடல், படித்தல், எழுதுதல்) |
| | 01.00 பி.ப -02.00 பி.ப | உணவு இடைவேளை |

| | | |
|---|---|---|
| | 02.00 பி.ப -03.15 பி.ப | தமிழ்- மாதிரி வகுப்பு, கற்றல் களங்கள், துணைக்கருவிகள் பயன்பாடு |
| | 03.15 பி.ப -03.30பி.ப | தேநீர் இடைவேளை |
| | 03.30பி.ப -05.00 பி.ப | எண்ணும் எழுத்தும் – தமிழ் - ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி நூல், கற்றல் விளைவுகள் - அறிமுகம் |
| நாள் 2 | 09.30 மு.ப -11.15 மு.ப | எண்ணும் எழுத்தும் – ஆங்கிலம் - ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி நூல், கற்றல் விளைவுகள் - அறிமுகம் |
| | 11.15 மு.ப - 11.30 மு.ப | தேநீர் இடைவேளை |
| | 11.30 மு.ப - 01.00 பி.ப | கதை மற்றும் பாடல் நேரம் |
| | 01.00 பி.ப -02.00 பி.ப | உணவு இடைவேளை |
| | 02.00 பி.ப -03.15 பி.ப | செயல்பாடு மற்றும் துணைக்கருவிகள் நேரம் |
| | 03.15 பி.ப -03.30 பி.ப | தேநீர் இடைவேளை |
| | 03.30 பி.ப -05.00 பி.ப | பங்கேற்பாளர்கள் மாதிரி வகுப்பிற்குத் திட்டமிடல் (ஆங்கிலம்) |
| நாள் 3 | 09.30 மு.ப -11.15 மு.ப | எண்ணும் எழுத்தும் – கணக்கு - ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி நூல், கற்றல் விளைவுகள் - அறிமுகம் |
| | 11.15 மு.ப - 11.30 மு.ப | தேநீர் இடைவேளை |
| | 11.30 மு.ப - 01.00 பி.ப | விளையாட்டு, நடிப்பு, பாடல் வாயிலாகக் கணக்கு |
| | 01.00 பி.ப -02.00 பி.ப | உணவு இடைவேளை |
| | 02.00 பி.ப -03.15 பி.ப | நிகழ்த்துகலைகள், கலை, கைவினைச் செயல்பாடுகள், வினாவிடைப் போட்டி வழியாகக் கணக்கு |
| | 03.15 பி.ப -03.30 பி.ப | தேநீர் இடைவேளை |
| | 03.30 பி.ப -05.00 பி.ப | பங்கேற்பாளர்கள் மாதிரி வகுப்பிற்குத் திட்டமிடல் (கணக்கு) |

| | | |
|---|---|---|
| நாள் 4 | 09.30 மு.ப-10.15 மு.ப | மதிப்பீட்டுச் செயலி, அடிக்கடி வினவப்படும் வினாக்கள் |
| | 10.15 மு.ப - 11.30 மு.ப | பங்கேற்பாளர்கள் மாதிரி வகுப்பிற்குத் திட்டமிடல் (தமிழ்) |
| | 11.30 மு.ப - 11.45 மு.ப | தேநீர் இடைவேளை |
| | 11.45 மு.ப - 01.00 பி.ப | பங்கேற்பாளர்களின் மாதிரி வகுப்பு (தமிழ்) |
| | 01.00 பி.ப -02.00 பி,ப | உணவு இடைவேளை |
| | 02.00 பி.ப -03.15 பி.ப | பங்கேற்பாளர்களின் மாதிரி வகுப்பு (ஆங்கிலம்) |
| | 03.15 பி.ப -03.30 பி.ப | தேநீர் இடைவேளை |
| | 03.30 பி.ப -05.00 பி.ப | பங்கேற்பாளர்களின் மாதிரி வகுப்பு (கணக்கு) |
| நாள் 5 | 9.30 மு.ப - 05.00 பி.ப | முதல் 2 அலகுகளுக்கான கற்றல் துணைக்கருவிகள் தயாரிப்பு / மதிப்பீடு (உயர் தொழில்நுட்ப ஆய்வகம்) |